# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014

## புவியியல்

| தரம் - 10 | சுட்டெண்:- | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

- 1 முதல் 40 வரையான எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்கவும்.
- 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.

1. மனித நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் எல்லா வளிமண்டலத் தோற்றப்பாடுகளும் ........................................ இடம்பெறுகின்றது.

   (மாறன்மண்டலத்தில் / படைமண்டலத்தில் / வெப்பமண்டலத்தில்)

2. தாவரங்கள் / விலங்குகள்/ அடங்கியதும் எப்போதும் உயிர்ப்புடன் தொழிற்பாட்டுக் கொண்டு இருப்பதுமான புவிப்படை ........................................ பெயரால் அழைக்கப்படுகின்றது.

   (கற்கோளம் / வளிக்கோளம் / உயிர்க்கோளம்)

3. மறேடாலிங் நதி ........................................ கண்டத்தில் அமைந்துள்ளது.

   (ஐரோப்பா / வடஅமெரிக்கா / அவுஸ்ரேலியா)

4. வளிமண்டலத்தில் ........................................ வாயு அதிகளவில் உள்ளது.

   (காபனீரொட்சைட்டு / ஐதரசன்/ நைதரசன்)

5. சமுத்திரங்களில் பசுபிக் சமுத்திரத்திற்கு அடுத்த நிலையில் ........................................ சமுத்திரம் உள்ளது.

   (அத்திலாந்திக் / இந்து/ ஆட்டிக்)

6. நீர்க் கொள்ளளவின் அடிப்படையில் ........................................ நதி உலகில் மிகப்பெரியது.

   (நைல் / அமேசன் / இந்து)

7. விசுவியஸ் எரிமலை ........................................ நாட்டில் காணப்படுகின்றது.

   (சிசிலி / இத்தாலி / ஐஸ்லாந்து)

8. எரிமலையால் உருவான ஏரிகளில் ........................................ ஒன்றாகும்.

   (ரோபரி / லடோகாஏரி / தங்கனிக்காஏரி)

9. ரஷ்யாவில் காணப்படும் இடைவெப்ப வலயப் புல்நிலம் ........................................ பெயரால் அழைக்கப்படுகின்றது.

   (பம்பாஸ் / ஸ்ரெப்ஸ் / பிரேயரீஸ்)

10. இலங்கையின் பொருளாதார வலய எல்லை ........................................ ஆகும்.

    (12 கடல் மைல் / 20 கடல் மைல் / 200 கடல் மைல்)



kalvi.lk

❖ 11- 20வரையான வினாக்களுக்கு சரி/பிழை என எழுதுக

11. புவியில் மண் நீரின் அளவு 0.28% ஆகும் ( )

12. நிலத்தினால் முழுமையாகச் சூழப்பட்ட நன்னீர்த் தொகுதி ஏரி ஆகும். ( )

13. ஒளித்தொகுப்புக்குத் தேவையான சூரியஒளி பெறப்படும் எல்லை நீர்க்கோளமாகும். ( )

14. சீயல் படையானது சீமாப்படையைத் தாங்கி நிற்கும் ( )

15. அமெரிக்காவின் தகடு ஒரு சமுத்திரத்தகடாகும். ( )

16. மன்னார் பிரதேசம் உலர்வலையத்தைச் சேர்ந்தது ( )

17. கோதுமைச் செய்கை பரந்த வர்த்தக வேளாண்மையாகும் ( )

18. இலங்கையில் கம்பஹா மாவட்டம் பன்றி வளர்ப்புக்குப் பிரசித்தி பெற்றது. ( )

19. வட அரைக்கோளத்தில் நீர்ப்பரப்பு அதிகளவு காணப்படுகின்றது. ( )

20. புவிநடுக்கம், எரிமலைச் செயற்பாடுகள் இடையோட்டில் நிகழுகின்றது ( )

❖ **21-30 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**

21. ஓசோன்படை ........................................ கதிர்களை உறிஞ்சிக் கொள்கிறது.

22. தென் அமெரிக்காவின் அமேசன் பிரசேதம் .................................. காடுகள் நிறைந்த பிரதேசமாகும்.

23. கும்புக்கன் ஓயா .................................................. உற்பத்தியாகின்றது

24. தேயிலைச் செய்கைக்கு .................................. மண் அவசியம்

25. முனைவுப் பகுதியிலிருந்து மத்திய கோட்டை நோக்கிவரும் நீரோட்டம் ................................ ஆகும்.

26. இலங்கையின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் .................................... ஆகும்

27. மத்தியதரை விவசாயத்தில் சிறப்பான பயிர்ச்செய்கையாக .................................. விளங்குகின்றது

28. இலங்கையின் நதிகள்............................................................ வடிகாற் பாங்கினைக் கொண்டுள்ளவை.

29. மத்திய மலைநாட்டில் வடக்கே அமைந்துள்ள மலைத்தொடர் ..................................... ஆகும்

30. கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 100m உயரமும் செல்லச் செல்ல $0.64^{0}c$ வெப்பநிலை குறைவடைதல் ........................................ ஆகும்.

❖ மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.

31. இலங்கையில் அதிகளவில் நெல்பயிரிடப்படும் மாவட்டம்
    1. அநுராதபுரம் 2. குருணாகல் 3. பொலனறுவை 4. மட்டக்களப்பு

32. சிங்கராஜவனத்தில் அமைந்துள்ள இயற்கைத்தாவரம்
    1. என்றும் பசுமையான காடுகள் 2. மத்திய கோட்டு ஈரவலயக்காடுகள்
    3. இடைவெப்பவலயக்காடுகள் 4. மலைநாட்டு ஈரவலயக்காடுகள்

33. இலங்கையில் உற்பத்திக் கைத்தொழில்களில் அதிகளவானவை காணப்படும் மாகாணம்
    1. தென்மாகாணம் 2. வடமாகாணம் 3. மேல்மாகாணம் 4. வடமேல்மாகாணம்



kalvi.lk

34. தென்னை பயிரிடப்படும் சிறிய முக்கோணவலயம்

1. கொழும்பு, குருணாகல், சிலாபம்
2. கொழும்பு, தங்காலை, புத்தளம்
3. ரன்ன, மித்தெனிய, தங்காலை
4. மித்தெனிய, காலி, தங்காலை

35. இடிமின்னல் செயற்பாடுகள் அ  ாவில் இடம்பெறும் வளிமண்டலப்பகுதி

1. மாறன்மண்டலம்
2. படைமண்டலம்
3. இடைமண்டலம்
4. வெப்பமண்டலம்

36. நீரியல் வட்டம் என்பது தொடர்பான சரியான கூற்று

1. வளிக்கோளத்துக்கும் நீர்க்கோளத்துக்குமிடையான நீர்ப்பரிமாற்றம்
2. வளிக்கோளத்துக்கும் நிலக்கோளத்துக்குமிடையான நீர்ப்பரிமாற்றம்
3. வளிக்கோளத்துக்கும் உயிர்க்கோளத்துக்குமிடையான நீர்ப்பரிமாற்றம்
4. நீர்க் கோளத்துக்கும் உயிர்க்கோளத்துக்குமிடையான நெருக்கமான தொடர்பு

37. புவிநடுக்கத்தை அளவிடும் றிட்சர் அளவினைக் கண்டறிந்த பல்கலைக்கழகம்

1. கேம்பிறிஜ் பல்கலைக்கழகம்
2. பரீஸ் பல்கலைக்கழகம்
3. காந்தி பல்கலைக்கழகம்
4. கலிபோர்னிய பல்கலைக்கழகம்

38. பிறேசிலியன் மேட்டுநிலம் அமைந்துள்ள கண்டம்

1. வடஅமெரிக்கா
2. தென்அமெரிக்கா
3. ஐரோப்பா
4. ஆசியா

39. அவுஸ்ரேலியாவில் கூடுதலாக நிலவும் காலநிலை வகை

1. அயனமண்டல மழைக்காலநிலை
2. வரண்ட காலநிலை
3. முனைவுக்காலநிலை
4. இளஞ் சூட்டு இடை வெப்பக்காலநிலை

40. கழிவு இரும்பிலிருந்து உருக்குத் தயாரிக்கும் முன்னணி நாடு

1. ஐக்கிய அமெரிக்கா
2. பிரித்தானியா
3. யப்பான்
4. இந்தியா

(1×40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1) அ) பின்வரும் இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

A. மட்டக்களப்பு
B. னுணுவில
C. சிலாபம்
D. எக்கல
E. மகாஇலுப்பலம

(5 புள்ளி)

ஆ) பின்வரும் விடயங்களை உலகப்புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

A. பிரித்தானியா
B. லூசியான
C. பீஜிங்
D. ஆஜென்ரீனா
E. தென்கொரியா

(5 புள்ளி)

2)

i. A உலகில் தேயிலை உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற இரண்டு நாடுகளையும்
B கரும்பு உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற இரண்டு நாடுகளையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. பெருந்தோட்ட விவசாயத்தில் எதிர்நோக்கப்படும் நான்கு பிரச்சினைகளை எழுதுக. (2 புள்ளி)


iii. பெருந்தோட்ட விவசாயத்தின் அண்மைக்காலப் போக்கின் தன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iv. உலகளாவிய ரீதியில் விலங்கு வேளாண்மையில் அண்மைக்காலமாக எதிர்நோக்கப்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)



kalvi.lk

3)





i. தரப்பட்ட புறவுருவப்படத்தில் A,D,C,D என்ற எழுத்துக்கள் குறித்து நிற்கும் பருத்திப் புடவைக் கைத்தொழில் பிரதேசங்களை எழுதுக. (2 புள்ளி)

ii. B என்ற எழுத்துக் குறிக்கும் நாட்டில் அக் கைத்தொழிலுக்குச் சார்பாகவுள்ள இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

iii. பருத்திப் புடவைக் கைத்தொழில் சார்ந்த இரண்டு பிரச்சினைகளைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (3 புள்ளி)

iv. பருத்திப் புடவைக் கைத்தொழில் சாரந்த மூன்று நவீன போக்குகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

4)




i. தரப்பட்ட தேசப்படத்தில் P,Q,R,S என்ற எழுத்துக்கள் குறித்து நிற்கும் இலத்திரனியல் உற்பத்தி நாடுகளை அதே ஒழுங்கில் எழுதுக. (2 புள்ளி)

ii. இலத்திரனியல் கைத்தொழிலின் பிரிவுகள் நான்கினை எழுதுக. (2 புள்ளி)


iii. இலத்திரனியல் கைத்தொழில் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்புத்தன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iv. இலத்திரனியல் கைத்தொழிலின் வளர்ச்சியால் மனிதனுக்கு ஏற்படும் இரண்டு சாதகமான விளைவையும் ஒரு பாதகமான விளைவையும் குறிப்பிடுக. (3 புள்ளி)



kalvi.lk

5)




i. தரப்பட்ட இலங்கைப் படத்தில் A,B,C D என்ற எழுத்துக்கள் குறித்து நிற்கும் கரையோரச் சமவெளியின் அம்சங்களை அதே ஒழுங்கில் எழுதுக. (2புள்ளி)

ii. இலங்கையின் பொருளாதாரத் துறையின் வளர்ச்சியில் தரைத்தோற்ற வலயமான கரையோரச் சமவெளி பெரும் பங்கு ஆற்றுகின்றது. இதற்கு ஆதாரமான இரு விடயங்களைக் குறிப்பிடுக. (2புள்ளி)

iii. மத்தியமலைநாடு

A. சேவைத்துறைக்கு ஆற்றுகின்ற ஒரு பயனையும்

B. விவசாயத்துறைக்கு ஆற்றுகின்ற ஒரு பயனையும்

C. கைத்தொழில் துறைக்கு ஆற்றுகின்ற ஒரு பயனையும் குறிப்பிடுக. (3புள்ளி)

iv. இலங்கையின் அமைவிட ரீதியான முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (3புள்ளி)

6)

i. கீழ்வரும் இயல்புகளைக் காட்டும் இலங்கையின் காலநிலை வலயங்களை எழுதுக.

A. ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சி 2000mmக்கு அதிகமாகவும் கடல்மட்டத்திலிருந்து 300mக்கும் குறைவான உயரமும் கொண்ட தென்மேல் பிரதேசம்.

B. ஆண்டுச் சராசரி மழை வீழ்ச்சி 1750mm - 2000mm வரையான மலை நாட்டின் காற்றொதுக்குப் பிரதேசம் (2புள்ளி)

ii. இலங்கையின் இயற்கைத் தாவரங்களில் ஒன்றான பற்றைக் காடுகள், முட்புதிர்களின் மூன்று பயன்பாடுகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (2புள்ளி)

iii. கண்டல் தாவரங்களின் மூன்று பயன்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (6புள்ளி)

7)

i. இலங்கையில் பயிரிடப்படும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் நான்கினை எழுதுக. (2புள்ளி)

ii. சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்ய இலங்கை அரசு மேற்கொண்டுள்ள இரண்டு நடவடிக்கைகளை எழுதுக. (2புள்ளி)

iii. இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் எதிர்நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3புள்ளி)

iv. விலங்கு வளர்ப்பு இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஆற்றுகின்ற பங்களிப்பு மூன்றினை எழுதுக. (3புள்ளி)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457